**செய்தி வெளியீடு எண்:1228** **நாள்:29.11.2021**

**<u>மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய ஆதாரப் பயிற்சி தொடக்க விழா உரை:</u>**

அன்பிற்குரிய மனிதவள மேலாண்மைத் துறையின் செயலாளர் அவர்களே!

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி இயக்குநர் அவர்களே!

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களே!

பயிற்சி தருவதற்காக வந்திருக்கின்ற பயிற்றுநர்களே! கல்லூரியைச் சார்ந்த பெருமக்களே! பயிற்சி பெற வந்திருக்கின்ற இளம் நண்பர்களே! கல்லூரியைச் சார்ந்த பொறுப்பாளர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனிதவள மேலாண்மை என்பது ஒரு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டுக்கு ஆதாரமாக விளங்குகிறது. நியமித்தல், பயிற்சி அளித்தல், அங்கீகரித்தல், ஒழுங்குபடுத்துதல் என்கின்ற நான்கு தூண்களின் அடிப்படையில் செயல்படுவதே மனிதவள மேலாண்மை.

எங்கெல்லாம் மனிதவள மேலாண்மை சிறப்பாக இருக்கிறதோ, அங்கெல்லாம் பணிகள் முயல் வேகத்தில் முடுக்கிவிடப்படுகின்றன. மக்கள் மகத்தான பணிகளையும் ஈடுபாட்டோடு செய்கிறார்கள். அவர்கள் மிகக் கடினமான பணியைக்கூட விரைவில் முடித்து விடுகிறார்கள். அதனால்தான் உலகெங்கிலும் தற்போது மனிதவள மேலாண்மைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

சரியான நபர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தகுதியும் திறமையும் இருந்தால் மட்டும் போதாது, மிகவும் சிரமமான சூழலிலிருந்து தன்னுடைய முயற்சியால் முன்னுக்கு வந்தவர்களாகவும் இருக்க வேண்டும். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அரசுப் பணியை உடனடியாகப் புரிந்துகொண்டு செம்மையாகச் செயலாற்றிவிட முடியாது. அவர்கள் பணியைக் குறித்துப் பயிற்சி பெற வேண்டும். நிர்வாகத்தின் நுணுக்கங்களை அறிந்துகொள்ள வேண்டும். பயிற்சியினால் மட்டுமே அனைத்தையும் கற்றுக்கொள்ள முடியாது. நம்மைச் சுற்றியுள்ள மூத்த அலுவலர்களிடம் நமக்குத் தெரியாதவற்றைக் கேட்டறிந்து கற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்கள் எந்தக் கோப்பையும் சிக்கல் இல்லாமல் செலுத்த முடியும்.

ஒரு வகையில் பார்த்தால் நாம் ஆற்றுகிற பணியே பயிற்சிதான். ஒவ்வொரு கோப்புமே வித்தியாசமானதாக இருக்கிறது. இரண்டு கோப்புகள் ஒரே மாதிரி இருப்பதில்லை. ஒவ்வொரு கோப்பிலும் விதிகளை ஒப்பிட்டுப் பார்த்து குறிப்புகளைத் தயாரிக்கிறபோது, அந்த விதியும் அலுவலக நடைமுறையும் நம் மனத்தில் பசையைத் தடவியது மாதிரி பதிந்துகொள்கிறது. பிறகு விதியைப் பார்க்காமலேயே நாம் செயல்பட முடிகிறது. இதைத்தான் அனுபவம் என்று சொல்லி நாம் பாராட்டுகிறோம்.

அரசுப் பணியைப் பொருத்த வரை அது மிகவும் முக்கியமான ஒன்று. எண்ணற்ற எளிய மக்களின் வாழ்க்கையில் ஏற்றத்தை ஏற்படுத்துகிற வாய்ப்புகள் கொண்டது. பணியாளர்கள் அனைவருமே பதிலளிக்க கட்டுப்பட்டவர்கள். ஆங்கிலத்தில் அக்கவுண்டபிளிட்டி என்று கூறுவார்கள். நாம் எந்தக் கோப்பை எப்படிக் கையாளுகிறோம்

என்பது இன்று அனைவருக்கும் வெளிப்படையாகத் தெரிகிற சூழல் உருவாகி விட்டது. நாம் எழுதுகிற ஒவ்வோர் எழுத்துமே பகிரங்கப் படுத்தப்படும் என்ற நிலை உருவாகி இருக்கிறது. இதை மனத்தில் வைத்து நாம் மிகுந்த பொறுப்புணர்வுடன் கடமையாற்ற வேண்டும். நேர்மையாகவும், உண்மையாகவும் செயல்படுவது அவசியம். எந்தக் காரணத்தைக் கொண்டும் விதிகளை மீறக்கூடாது. யாருக்காகவும் அனாவசியமாக வளைந்து கொடுக்கக் கூடாது. முடிந்த அளவிற்கு நாம் ஒரு நேர்வு குறித்த அனைத்து விதிகளையும், நீதிமன்ற தீர்ப்புகளையும் அறிந்துகொள்ள வேண்டும். அந்தக் கோப்பில் தெளிவாகவும் விரிவாகவும் குறிப்புகளை எழுத வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் வாலாயமாகக் கையாளக் கூடாது. மொட்டைக் கையொப்பம் போட்டுவிடக் கூடாது.

நாம் எந்தெந்த விதிகளைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதை அறிமுகப்படுத்துகிற ஒரு நிகழ்வுதான் ஆதாரப் பயிற்சி. இது ஒரு பாலம்தானே தவிர, இதுவே ஊர் அல்ல. இது அடித்தளம்தானே தவிர, கட்டடம் அல்ல. இது வெற்றுத்தாள்தானே தவிர, அச்சடிக்கப்பட்ட புத்தகம் அல்ல. இது வரைபடம்தானே தவிர, போய்ச் சேருகிற இடம் அல்ல. இது அரிசிதானே தவிர, அறுசுவை உணவு அல்ல. இது குற்றால அருவியின் படமே தவிர, குளியல் போடுகிற அதன் சாரல் அல்ல. இதை உணர்ந்து ஆதாரப் பயிற்சியை முடித்துவிட்ட காரணத்தால் அனைத்தும் தெரிந்துகொண்டு விட்டோம் என்ற இறுமாப்புடன் கோப்புகளைக் கையாளக் கூடாது. நாம் முதற்படியை முழுமையாக ஏறிவிட்டோம் என்று திருப்தி வேண்டுமானால் அடையலாம்.

ஆதாரப் பயிற்சியைப் பொருத்த வரை இங்கே வருகிற அலுவலர்கள் அனுபவம் வாய்ந்தவர்கள் என்பதை நீங்கள் உணர வேண்டும். நறுமணம் மிக்க பூங்காவில் மல்லிகை மலர்களுக்கு மத்தியில் அமர்ந்திருக்கிற ஒருவன் அதன் வாசனையை உள்வாங்கிக் கொள்வதற்கு நன்றாகக் காற்றை உள்ளிழுத்து விடுவதைப்போல இந்தப் பயிற்சியில் அனுபவம் வாய்ந்த இந்தப் பயிற்றுநர்களிடமிருந்து எவ்வளவு கிரகிக்க முடியுமோ அவ்வளவு நீங்கள் உறிஞ்சிக்கொள்ளுங்கள். ஒரே மழைதான். கற்களில் பெய்தால் வழிந்தோடி விடுகிறது. களிமண்ணில் பெய்தால் அது உறிஞ்சி விடுகிறது. பாத்திரத்தில் பெய்தால் குடிநீராகிறது. பாத்தியில் பெய்தால் பயிர்களுக்கு உயிர்நீராகிறது. கடலில் பெய்தால் மறுபடியும் முகிலாகிறது. இங்கே அனுபவம் வாய்ந்தவர்களை நீங்கள் பாத்தியாகப் பயன்படுத்திக் கொள்ளப் போகிறீர்களா, அல்லது கட்டாந்தரையாகக் கருதிவிடப் போகிறீர்களா என்பதை நீங்கள்தான் முடிவுசெய்ய வேண்டும்.

எந்தப் பயிற்சியிலும் எல்லாவற்றையும் முழுமையாகக் கற்றுத்துந்துவிட முடியாது. நம் சக பயிற்சியாளர்களிடம் வகுப்பில் நடத்தப்பட்டவற்றைக் கொஞ்சம் ஆழமாக விவாதிக்க வேண்டும். அப்போது இன்னும் தெளிவாகப் புரியும். வீட்டிற்குச் சென்று கவனித்தவற்றை விரிவாக நினைவுபடுத்தி அசைபோட வேண்டும். அப்போது இன்னும் தெளிவாகப் புரியும். பிறகு அது தொடர்பான வினாக்களைப் பயிற்றுநர்களிடம் கேட்டுத் தெளிவு பெற வேண்டும்.

கரும்புச்சாறு பருகியவர்களுக்கு ஒரு செய்தி தெளிவாகத் தெரியும். கரும்பை ஒருமுறை மட்டும் அதை அரைக்கும் இயந்திரத்தில் செலுத்தினால் கால்வாசி கரும்புச்சாறுகூட கலத்தில் வராது. மீண்டும் மீண்டும் செலுத்தி கரும்பு சக்கையாகும் வரை பிழிந்தால்தான் முழுமையாகச் சாறெடுக்க முடியும். எனவே, திரும்பத் திரும்ப பயில்வதன் மூலம்தான் பொறுப்பான அரசுப் பணியை விருப்பாகச் செய்ய முடியும்.

பயிற்சியைப் பொருத்த வரை நாம் சிறிது கற்றாலும் நடைமுறைப்படுத்தும்போதுதான் அது ஆழமாக மனத்தில் பதியும். அனுபவம்தான் ஒன்றை முழுமையாக்குகிறது. மனிதன் தன்னுடைய தவறுகளிலிருந்து கற்றுக் கொள்கிறான். நீங்கள் பணியில் சேர்கிறபோது

பயிற்சியாக அதைக் கருதிக்கொண்டால், ஒவ்வொரு கோப்பிலும் இன்னும் சற்றுக் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். அதன்மூலம் நீங்கள் பெற்ற பயிற்சி முழுமை அடையும்.

ஒவ்வோர் அலுவலகத்திலும் பழம் தின்று கொட்டை போட்ட பலர் இருப்பார்கள். அவர்கள் கண்ணை மூடிக்கொண்டு விதிகளைச் சொல்வார்கள். ஒரே நொடியில் நீதிமன்றத் தீர்ப்பை மேற்கோள் காட்டுவார்கள். அவர்கள் கல்வித் தகுதி அதிகம் இருக்காது. ஆனால் அனுபவமோ கடல்போல விரிந்திருக்கும். பயிற்சி பெறுகிற நீங்கள் 'நான் நிறையப் படித்திருக்கிறேன். இவர்களைவிட எல்லாம் படித்துப் பட்டம் பெற்றிருக்கிறேன்' என்று நினைத்தால் அந்த மகத்தான மனிதர்களிடமிருந்து எதையும் கற்றுக்கொள்ள முடியாது. உங்கள் இதயத்தைக் கடற்பஞ்சாக வைத்திருங்கள்; அனைத்தையும் உறிஞ்சிக்கொள்ள முடியும். சிக்கலான கோப்புகள் வருகிறபோது அதில் சிக்கிக்கொள்ளாமல் இருக்க சிலருடைய அறிவு நமக்கு சிக்கிமுக்கிக் கற்களாக இருக்கும். அவர்களிடம் அறிவுரை கேட்டு பழைய கோப்புகளைப் புரட்டி தெளிவாகக் குறிப்பு எழுதுகிற திருப்தியே அலாதியானது.

ஆதாரப் பயிற்சியின்போது நீங்கள் எத்தகைய முக்கியமான பணியில் சேர்ந்திருக்கிறீர்கள் என்பது தெரியும். கற்றுக்கொள்வது எப்போதும் தொடர்ந்து நடக்க வேண்டிய ஒன்று என்பதையும் நீங்கள் உணர முடியும். அரசு நிர்வாகம் அனைவருக்கும் பதில் சொல்லக் கடமைப்பட்ட ஒன்று. இன்று தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் எந்த ஒரு நபரும் நீதிமன்ற வில்லையை ஒட்டி நம் கோப்புகளிலிருந்து தகவல்கள் கேட்கலாம். எனவே, நாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். பொறுப்புணர்வுடன் கோப்பைக் கையாள வேண்டும். ஒரு காகிதம் நம்மிடம் இருக்கும் வரைதான் ரகசியமானது. அலுவலர் கையொப்பமிட்ட பிறகு அது பொது மக்களுக்குச் சொந்தமானதாகி விடுகிறது. ஒரு காலத்தில் அரசு ஆணையை அந்த அலுவலகம் மட்டுமே அறியும். ஆனால் இன்று இணையதளத்தில் அது உடனே வெளியிடப்பட்டு பட்டிதொட்டிகளில் இருக்கிறவர்களும் அறிந்துகொள்ள முடிகிறது. இதையெல்லாம் மனத்தில் வைத்து நீங்கள் பணியாற்ற வேண்டும்.

உழைப்பே உன்னத உடற்பயிற்சி. அடுத்தவர்களுக்காக நீங்கள் பணியாற்றினால் நீங்கள் வேலைக்காரர்களாக இருப்பீர்கள். உங்களுக்காகப் பணியாற்றினால் எஜமானர்களாக இருப்பீர்கள். மற்றவர்கள் சொல்வதற்காக நாம் பணியாற்ற வேண்டும் என்று நினைக்காமல் நம் திருப்திக்காக, நம்முடைய மகிழ்ச்சிக்காக, நம்மால் எளிய மக்கள் இதழ்களில் புன்னகை சிந்த வேண்டும் என்பதற்காக நீங்கள் பணியாற்றத் தொடங்கினால் அலுவலகத்திற்கு வருவதற்கு ஆசையாய் இருக்கும். உற்சாகத்துடன் அலுவலகம் வந்துவிட்டு திருப்தியுடன் இல்லம் திரும்பி விடுங்கள். அப்போது நீங்கள் பெறுகிற ஊதியம் உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும்.

ஒரே பணியில் இருந்தாலும் நன்றாகப் பணியாற்றுபவர்களை மேலதிகாரிகளும் கௌரவமாக நடத்துகிறார்கள். அவர்களுக்கு மரியாதை அளிக்கிறார்கள். நம் பணியின் தரத்தைப் பொருத்தே நமக்கு மதிப்புக் கூடுகிறது என்பதை உணருங்கள்.

உருளைக்கிழங்காக இருக்கிறபோது ஒரு ரூபாயாக விற்கப்படுகின்ற ஒன்று, பொரியலாகிறபோது ஐந்து ரூபாயாக ஆகிவிடுகிறது. மதிப்புக் கூட்டப்பட்ட மனிதர்களாக நம் பணியின் நிமித்தம் நாம் மாற வேண்டும்.

சிலர் பணியிலிருந்து தப்பிக்கப் பார்ப்பார்கள். எங்கே கடினமான வேலை கொடுத்து விடுவார்களோ என்று முக்கிய நாட்களில் முந்திக்கொண்டு விடுப்பு எடுப்பார்கள். அவர்கள் பெயரைக் காலம் கடலலைபோல அழித்துவிட்டு வேலை செய்கிறது.

நாம் காளைகளின் கொம்பைப் பிடித்து அடக்குகிற பணியாளர்களாக இருக்க வேண்டும். சவால்களைச் சந்திக்க வேண்டும். நெருக்கடிகள் நெருங்குகிறபோது நெஞ்சை நிமிர்த்துக்கொண்டு போராட வேண்டும். கடினமான பணிகள் வருகிறபோது களத்தில் இறங்கி பணியாற்ற வேண்டும். அப்படிப்பட்ட உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் பணியாற்றியவர்களை காலம் பொன்னெழுத்துகளில் பொறித்துத் தன் இதயத்தில் பத்திரமாகப் பாதுகாத்து வைத்துக்கொள்கிறது.

அரசுப் பணியாளர்களுக்கு நியாயமான ஊதியம் கிடைக்கிறது. நீங்கள் நேர்மையாகவும் உண்மையாகவும் பணியாற்ற வேண்டும். நேர்மையைவிட உயர்ந்த நெறி இல்லை. பணம் பெறலாம், குறுக்கு வழியில் சம்பாதிக்கலாம், விரைவில் வசதிகளைப் பெருக்கிக் கொள்ளலாம் என்று நீங்கள் நினைத்தால் சிக்கிக் கொள்வீர்கள் என்பது மட்டும் அல்ல, உங்கள் பணியே அழுக்கடைந்து விடும். நான் பலரைப் பார்த்திருக்கிறேன், தவறான வழியில் சம்பாதித்த அவர்கள் நிம்மதியில்லாமல் அல்லாடுவதை. எனவே, நேர்மையாகவும் நியாயமாகவும் நடந்துகொள்ளுங்கள்.

உங்களிடம வருகிறவர்களைக் கனிவோடு நடத்துங்கள். கருணையோடு நடந்து கொள்ளுங்கள். பாதிக்கப்பட்டவர்களின் இடத்தில் நீங்கள் இருந்தால் என்ன நிலைமை என்பதை யோசித்துப் பாருங்கள். அப்போதுதான் அவர்களுக்கு விரைவாகவும் நிறைவாகவும் தீர்வுகாண முடியும்.

ஆதாரப் பயிற்சியை பவானிசாகரில் வழங்குவதுதான் நடைமுறை. பணியாளர்கள் மாலைப்பொழுதிலும் தங்களுக்குள் கலந்து பேசி இன்னும் சிறப்பாக அலுவலக நடைமுறைகளைத் தெரிந்துகொள்ள முடியும் என்பதற்காகவே இந்த ஏற்பாடு. ஆனால் பயிற்சியைப் பெற வேண்டியவர்கள் நிறைய இருக்கிற காரணத்தால் பரவலாக்கப்பட்ட பயிற்சி முறையை அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பரிட்சார்த்தமாகச் செய்தது. அது பலருக்கும் பயனுள்ளதாக இருந்தது. சட்டமன்றக் கூட்டத் தொடரில் இந்த அரசு அறிவித்ததற்கு இணங்க, இப்போது பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக, மீண்டும் அந்த நடைமுறையைச் சென்னையில் இன்று நான் தொடங்கி வைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் அனைவரும் முழு முயற்சியுடன் இந்தப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். இதற்காக வகுப்பறைகளைத் தந்து, பயிற்சியாளர்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்கிய கிருஷ்ணசாமி கல்லூரி தாளாளர் அவர்களையும், முதல்வர் அவர்களையும் நான் மனதாரப் பாராட்டி நன்றிகூற விரும்புகிறேன்.

‘பயிற்சியே முயற்சியின் முதற்படி’ என்பதை உணர்ந்து நீங்கள் இப்பயிற்சியில் வெற்றிபெற்று தலைசிறந்த பணியாளர்களாக ஆக வேண்டும் என்று என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**